**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

03.07.2026

O.S. No. 331/2022

P.W. 1 திரு. அண்ணாதுரை

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**கூடுதல் குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்) -**

கீழ தெருவில் உங்களுக்கோ, மூன்றாம் வாதிக்கோ ஏதாவது சொத்து உள்ளதா என்றால் இல்லை. 2013 ல் 1 ஆம் பிரதிவாதி பெயரில் வழக்கு சொத்துக்குரிய பட்டாவை மாற்றி தர தாசில்தார், RDO மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனு கொடுத்தீர்களா என்றால் ஆமாம். அந்த மனுவின் படி பட்டா மாற்றி இதுவரை தரவில்லை, பரிசீலனையில் உள்ளது. எனவே நீங்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு நீதிப் பேராண்மை மனு தாக்கல் செய்தீர்கள் என்றால் ஆமாம். அந்த மனுவில் தனியார் பெயரில் உள்ள பட்டாக்களை சமுதாயத்தின் பெயருக்கு மாற்றி தர சொல்லி தாக்கல் செய்த மனு என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 9 ரீசெற்றில் மெண்ட் ரெஜிஸ்தரில் மேற்படி பட்டா இசக்கிமுத்து கோன் என்ற தனி நபரின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 நீதிமன்ற தீர்ப்பின் படி ஆதிமாமுனிவர் சமுதாய டிரஸ்ட்க்கு வேண்டி இரண்டு டிரஸ்டிக்கள் செயல்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 9 ன் படி பட்டா மடம் என்று உள்ளதை மாற்ற கோரி வருவாய்

துறையில் ஏதாவது மனு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஞபாகம் இல்லை. 2007 ல் உங்கள் சமுதாயத்தில் சார்பில் பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட்டதா என்றால் ஆமாம். அதற்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பொதுக்குழுவில் என்ன தீர்மானம் இயற்றப்பட்டது என்று கூறமுடியுமா என்றால் ஞாபகம் இல்லை. 2007 ல் கூட்டப்பட்ட பொதுக்குழுவில் யார் யார் டிரஸ்டிகளாக இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி 1 ஆம் வாதி சமுதாயம் 2007 லிருந்து 2009 ஆம் வருடம் வரை யாருடைய டிரஸ்டி தலைமையில் செயல்பட்டு வந்தது என்றால் அப்பொழுது டிரஸ்டி இல்லை, ஐந்து பேர் கொண்ட கமிட்டிதான் செயல்பட்டு வருகிறது. மேற்படி ஐந்து பேர்களை கொண்ட கமிட்டியை நிர்வாகிக்க டிரஸ்டிகளிலிருந்து ஏதாவது தீர்மானங்கள் இயற்றப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. அது சம்பந்தமான ஆவணங்களை தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். மேற்படி ஐந்து பேர் கொண்ட கமிட்டி நிர்வகிக்க அவர்களுக்கு அதிகாரம் இல்லை, அவ்வாறு அவர்களை நியமனம் செய்ய பொதுகுழுவிற்கு தீர்மானம் ஏற்றவும் அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. பின்னர் தாக்கல் செய்யலாம் என்று கூறியுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. முந்தைய சமுதாய டிரஸ்டி சிதம்பரம் எந்த வருடம் இறந்து போனார் என்றால் ஞாபகம் இல்லை. 2009 க்கு பின்னர் சமுதாயத்திற்கு வேண்டி நீங்கள் பல வழக்குகள் நடத்தி வந்தீர்கள், அதில் சிதம்பரம் இறந்துபோன விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. பிரதிவாதி கூறுகிறார் சிதம்பரம் 2014 ல்தான் இறந்து போனார் என்றால் ஆவணங்களை பார்த்துதான் கூற

முடியும். மேற்படி சமுதாயத்திற்கு வேண்டி திரு. கண்ணன், திரு. ராமச்சந்திரன் மற்றும் திரு. குமாரசாமி ஆகியோர் வழக்கறிஞராக ஆஜராகியுள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 12.02.2010 ஆம் தேதியிய வழக்கறிவிப்பு சமுதாயத்திற்கு வேண்டி அதன் வழக்கறிஞர் திரு. கண்ணன் அவர்கள் அனுப்பியதுதானா என்றால் ஆமாம். **12.02.2010 ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி அறிவிப்பு எந்த பரிகாரம் கேட்டு அனுப்பப்பட்டது என்றால் பிரதிவாதி சமுதாய இடத்தில் வாடகைதாரராக இருந்து வந்ததால், புதிதாக வாடகை ஒப்பந்தம் செய்ய கோரி மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்த பிரதிவாதி 2009 ஆம் ஆண்டில் சமுதாயத்தில் வாடகைததாரராக இருந்தார் என்பதை காண்பிக்க ஏதாவது ஆவணங்கள் இருந்ததா என்றால் ஏற்கனவே பிரதிவாதியின் தந்தை ராமகிருஷ்ண ஐயர் என்பவர் சமுதாய டிரஸ்டிமிருந்து 18 சென்ட் தரை வாடகை பெற்று அனுபவித்து வந்ததால், அதன் அடிப்படையில் மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டது. நாங்கள் 2009 ல் பதவி ஏற்கும்போது ராமகிருஷ்ண ஐயர் வாடகை ஒப்பந்தத்தை பார்வையிட்டேனா என்றால் ஞாபகம் இல்லை. 16.07.2013 ஆம் தேதியிய தினகரன் பத்திரிக்கையில் எங்களது சமுதாயத்தின் பெயரில் பிரசிக்கப்பட்ட அறிவிப்பு என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். **16.07.2013 ஆம் தேதியிட்ட தினகரன் பத்திரிக்கையில் விளம்பரம் ஆனது பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அறிவிப்பு முன் ஆதாரங்களை பார்த்து அதன் அடிப்படையில் பிறகு பிரசிக்கப்பட்டதா என்றால் ஆமாம். 11.03.2020 ல் முதன்மை சார்பு நீதிமன்றம், நாகர்கோவில் முதலேற்பு வழக்கு

எண். 131/2009, 132/2009 மற்றும் 146/2009 ல் பிறப்பிக்கப்பட்ட பொதுவான தீர்ப்புரை மேற்படி ஆவணம் என்னிடம் காண்ப்பிக்கப்படுவதுதான். **13.03.2020 ல் உள்ள தீர்ப்புரை ஆவணம்பி.வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி வழக்கில் இரண்டாம் பிரதிவாதி சிதம்பரம் தாக்கல் செய்த எதிர் வழக்குரை என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். **சிதம்பரம் தாக்கல் செய்த எதிர் வழக்குரை ஆவணம் பி.வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி வழக்கில் சமுதாயத்திற்கு வேண்டி திரு. குமாரசாமி மற்றும் திரு. ராமசந்திரன் ஆகியோர்கள் ஆஜரானார்கள் என்றால் சரிதான். முதன்மை வாக்குமூலத்தில் நான் 2009 ல் டிரஸ்டியாக பொறுப்பேற்றதாக சொல்லும்போது எந்த நபரிடமிருந்து டிரஸ்டி பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் தனிப்பட்ட நபர்களிடமிருந்து பொறுப்பேற்கவில்லை, பொதுக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் யாரும் எதிர்ப்பு தெரிவிக்காததால் தீர்மானத்தில் அடிப்படையில் பொறுப்பேற்றுள்ளேன். எனக்கு முன்பு சமுதாய டிரஸ்ட் நிர்வாகம் யாரிடம் இருந்தது என்றால் ஐந்து நபர் கொண்ட கமிட்டியிடம் இருந்தது.

ஆவணங்களை பார்த்து கூடுதல் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி இருப்பதால் வேறொரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது.